**நீர், நிள பிரச்சனைகள் முறியட்க்க அங்கக பயிற்சியும், பல்வகை பயிரிடுதலும்**



பயிர் வளர்வதற்கு நல்ல மண், தூய்மையான நீர் அகியவை முக்கியமானதாகும். மண்ணின் வளம் சற்று குறைந்தோ, அல்லது, அசுத்தமான நீரோ பயன்படுத்தினால் அது விவசாயிகளின் வாழ்கையையே பாதிக்கும். இவ்வாறான சூழ்நிலையில் விவசாயிகள், நிலத்தை விற்றுவிட்டோ அல்லது வேறு வேலையை தேடிப் போவதே தவிர வேறு வழியில்லை என்று தமிழ்நாட்டின், கோயம்புத்தூர் மாவட்டம், கனகான் தோட்டத்தை சார்ந்த (Kanakkan thottam) திரு. R. சுப்பையன் கூறுகிறார்.

**உணர்ச்சிப் பூர்வ இணைப்பு** :

இவை இரண்டு முடிவுகளுமே, தீர்மானிப்பது, சற்றே கடினமான காரியம், ஏனெனில் நாம் நம் நிலத்தின் மீது உணர்ச்சிப் பூர்வமாக, பாரம்பரியமாக சில பிணைப்புகளில் ஏற்படுத்தியுள்ளோம். திரு. சுப்பையன் கூறுகையில், “நமக்கு நிலங்கள் என்பது நமது குடும்பத்தின் ஒரு விரிவுப்படுத்தப்பட்ட இடமாகவேயுள்ளது” என்கிறார்.இவரது கிராமத்தின் குறுக்கே, நொய்யல் ஆறு உள்ளது. இதில் கோயம்புத்தூரின் சாயத் தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுகள் மூலம் நீர் மாசுப்பட்டது. இதை உபயோகித்ததன் காரணமாக, இவரது 10 ஏக்கர் நிலமும் விவசாயித்திற்கு உதவாத நிலமாக மாறியது.இவரை போலவே, அக்கிராமத்தின் பல விவசாயிகளும் இந்த பிரச்சனைக்கு உள்ளாகினர்.

இதனால் பலர் நிலத்தை விற்றுவிட்டு, பல்வேறு நகரங்களுக்கு குடியெர்த்தனர்.ஆனால் திரு. சுப்பையன் அவர்களால், நிலத்தை விட்டு போக முடியவில்லை. பல்வேறு கருத்துகளை அலசினார். குறைந்த முதலீட்டில், பயிர் சாகுபடி செய்வதற்கான வழிகளை ஆராய்ந்தார். அவ்வாறு செய்கையில், பல நாட்களுக்கு பிறகு, இவருக்கு பரித்துரைக்கப்பட்டது, பல்வகை பயிரிடுதலும், இயற்கை வேளாண்மையுமாகும்.வல்லுரைகளின் கருத்துப்படி, பல்வகை பயிரிடுதல் மூலமாக எந்த பிரச்சனையும் இல்லாமல் சிறந்த வருமானம் அடைய முடியும். ஒரு பயிர் தோல்வி அடைந்தாலும், மற்ற பயிர்களின் சாகுபடியின் மூலம் இதை ஈடுகட்டலாம்.

**ஊடுபயிர் :**

இவர் தனது 10 ஏக்கரில், 3 ஏக்கரில் தென்னை சாகுபடியும், 2 ஏக்கரில் கறி வேப்பிலையும், 2 ஏக்கரில் அல்பாஅல்பா மற்றும் மீதமுள்ள 3 ஏக்கரில் இளநீர்கான தென்னை மரங்களின் ஊடுப் பயிர்களாக் பாக்கு மரங்களையும் வளர்கறார். இவை அனைத்து பயிர்களும் இயற்கை முறையில் வளர்க்கப்படுகிறது.இயற்கை முறையை பின்பற்றுவதன் காரணமாக இவர் கூறுவது.

முன்பு இரசாயன உரங்களை கொண்டு விவசாயம் மேற்கொண்டதன் மூலம் நிலங்களையும் இலந்து, 30 லட்சம் கடன் தொகையும் வெலுத்தும் நிலமையில் உள்ளதாக கூறுகிறரா். ஆனால் இன்று இயற்கை முறையில், இயற்கை ஈடுபொருட்களை கொண்டு விவசாயம் செய்வதனால், குறைந்த செலவு செய்வதாகவும், மண்ணின் வளம் அதிகரித்துள்ளதாகவம் கூறுகிறார்.

**மற்ற விவசாயிகள் இவரது நிலத்தை பார்வையிட்டபின் கூறிய கருத்துக்கள்** :

பல விவசாயிகள் நஷ்டமடைந்ததாகவும், நிலத்தை விற்றுவிட்டு வேறு வேலையில் இறங்கப் போவதாகவும் கூறுகின்றனர். இதன் காரணத்தை ஆராய்ந்து பார்க்கையில், அதிக மகசூல் கிடைக்கும் என்ற எண்ணத்தில், இவர்கள் அதிக இரசாயன உரங்களை பயன்படுத்தியது தெரியவந்துள்ளது.

**தனிப்பட்ட இழப்புகள்** :

தனிப்பட்ட இழப்புகளை காட்டிலும் இரசாயன உரங்களின் உபயோகத்தில் சுற்றுப்புற சீரழிவுக்கு தாங்களும் ஒரு காரணம் என்பதை உணரவேண்டும். இதன் மாறாக, அங்கக செய்முறைகளில் மூலம் சுற்றுப்புரத்திற்கு எந்த தீங்குமில்லை என்பதையும் உணரவேண்டும்.“இம்முறையானது, குறைந்த முதலீட்டில் தகுந்த பலன்களை தருவதாகவும், விவசாயிகள் தாங்களாகவே இம்முறையை பயன்படுத்த முடியும் என்பதாலம், மேலும் அதிகப்படியான அளவு ஈடுபொருட்களை பயன்படுத்தினாலும், இவை எந்த பாதிப்பும் ஏற்படுத்தாது” என்றும் திரு. சுப்பையன் கூறுகிறார்.தற்போதைய வேலையாள் பற்றாக்குறை நிலைமைக்கு, இம் முறை மிகவும் சிறந்ததாகும். இது உலகம் முழுவதும், அனைத்து துறையிலும் உள்ள பிரச்சனை என்றாலும், இயற்கை வேளாண் முறையை ஒருவர் பயன்படுத்த ஆரம்பித்தால், அவர்கள் தாங்களாகவே, அனைத்து வேலைகளையும் செய்ய கற்றுக் கொள்ளவேண்டும். வேலையாட்கள் இருப்பினும், விவசாயி தனது சொந்த பொறுப்பில் அதை மேற்பார்வையிட வேண்டும்.

**இலாபகரமான உயிரினங்கள் :**

அங்கக விவசாயி ஒருவருக்கு, அவரது தொழிற்சாலையான நிலத்தில் பல்வேறு நுண் உயிரிகளும் நாள் முழுவதும் மண் வளத்தை அதிகரிக்க பாடுபடுகிறது. உண்மையில் விவசாயியை காட்டிலும், இவ்வுயிரினங்கள் நல்ல பயிர் வளர்ச்சிக்கு முக்கிய பொறுப்பாற்றுகிறது.மேலும் பயிர் தோல்வியடைந்தாலும், விவசாயிகள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதற்கும் முக்கிய காரணமாக ஒள்ளது ஒரு வகை பயிரிடுதலும், இரசாயன உரங்களின் உபயோகிப்புக்களும் ஆகும்.

பல்வகை பயிரிடுதல் மற்றும் இயற்கை வேளாண்மை ஒரு விவசாயியும் தோல்வியடைவதில்லை என்று திரு. சுப்பையன் கூறுகிறார்.இயற்கை வேளான் முறைக்கு மாறிய, சுமார் 7 வருடத்தில் இவரது அனைத்து கடன்

தொகையும் செலுத்திவிட்டதாகவும் கூறுகிறார்.

**தொடர்புக்கு** :
திரு. R. சுப்பையன்,
4/5 - A,கனக்கான் தோட்டம்,
A.G. புதூர் அஞ்சல், ஈறுகூர் வழி, (Irugur)
கோயம்புத்தூர்,தமிழ்நாடு - 641103.
**அலைபேசி** : 0936 - 3228039
**தொலைபேசி** : 0422 - 2627072.